மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.

முன்னிலை. திரு.A. மருதுபாண்டி, B.Com.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இரணியல்

(கூடுதல் முழு பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

**E.A.No.04 of 2024**
**in**
**E.A.02/2023**
**in**
**E.P.21/2009**
**in**
**O.S.No.123 of 1999**

தங்கரெத்தினம் (இறப்பு)

மற்றும் பலர். ....... மனுதாரர்கள் / டிகிரி ஹோல்டர்கள் / வாதிகள்.

எதிர்

செல்வராஜ் ........ எதிர்மனுதார் / தீர்ப்புக் கடனாளி /பிரதிவாதி

இம்மனுவானது இன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் / டிகிரி ஹோல்டர்கள் / வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.அஜீஷ் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / டிகிரி ஹோல்டர்கள் / வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனுவை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் / டிகிரி ஹோல்டர்கள் / வாதிகள் தரப்பில் ஆணையர் ஊதியம் ரூபாய் 5,000/- த்தை மனுதாரரின் வங்கி கணக்கிற்கு RTGS மூலமாக வழங்க உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு 162 to 165 Cr.P.C and Section 151 C.P.C. கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் / டிகிரி ஹோல்டர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-</u>

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு அதில் ஆணையர் ஊதியம் ரூபாய் 5,000/- வாதி நீதிமன்றத்தில் கட்டி வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது என்றும், நீதிமன்ற உத்தரவு படி வாதி கட்டி வைத்துள்ள ரூபாய் 5,000/- இந்த வழக்கின் நீதிமன்ற கணக்கில் இருந்து வருகிறது என்றும், அந்த தொகையினை ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின் பெற்றுக் கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டிருந்தது என்றும், மேற்படி எண் வழக்கில் தனக்கு வழங்கப்பட்ட உத்தரவினை பட்டிகை சொத்தில் நிறைவேற்றி இறுதி அறிக்கையை 05.04.2024 ந் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்ற ஆணையர் ஊதியம் ரூபாய் 5,000/-

வாதி நீதிமன்றத்தில் கட்டி வைத்துள்ளதை தனது வங்கி கணக்கு உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, திருவட்டார் கிளை, வங்கி கணக்கு எண் 67278772665 IFSC Code No.SBIN0070017 மூலம் தனக்கு வழங்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, அந்த தொகையினை தனது வங்கி கணக்கிற்கு RTGS மூலமாக வழங்க உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

வழக்கு கோப்பை மிக கவனமாக பரிசீலனை செய்த போது நிறைவேற்றுதல் மனுவில் ஆணையர் நியமனம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து உத்தரவிட அவருக்கு ஊதியமாக ரூபாய் 5,000/- நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி தொகை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த **05.04.2024** அன்று மனுதாரர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். மேற்படி

சூழ்நிலையில் மேற்படி ஊதியத்தை மனுதாரருக்கு திரும்ப கொடுப்பதே சரியாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**5.** முடிவாக, இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணையரின் ஊதியமான ரூபாய் 5,000/- த்தை மனுதாரரின் வங்கியான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, திருவட்டார் கிளை, வங்கி கணக்கு எண் 67278772665 ற்கு RTGS மூலம் மாற்றுமாறு உத்தரவிட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 07 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்ட உத்தரவு.

(ஒம்) அ. மருதுபாண்டி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல் (முழு கூடுதல் பொறுப்பு)

**உண்மை நகல்**

**D.M.C. Eraniel.**
**E.A.No.04 of 2024**
**in**
**E.A.02/2023**
**in**
**E.P.21/2009**
**in**
**O.S.No.123 of 1999**
**Fair/Draft order**
**Dated 07.06.2024**